

வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி மற்றும் இந்துசமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று முன்தினம் (13.7.2025) ஈரோடு மாவட்டம், திண்டல் வேலாயுத சுவாமி திருக்கோயிலில் புதியதாக முருகன் சிலை அமைக்கும் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் இந்து சமய அறநிலையத்துறையின் ஆணையாளர் பி. என்.ஸ்ரீதர், மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர்.ப.செல்வராஜ், ஈரோடு மாநிலங்களவை உறுப்பினர் கே.இ. பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி. சந்திர குமார் உட்பட பலர் உள்ளனர்.

ஈரோடு மாவட்டம் –

# திண்டலில் 186 அடி உயர முருகன் சிலை அமைக்கப்படவுள்ள இடம்!

## அமைச்சர்கள் சு.முத்துசாமி – பி.கே.சேகர்பாபு நேரில் பார்வையிட்டு ஆய்வு!

ஈரோடு, ஜூலை 15-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழி காட்டுதலின்படி, வீட்டு வசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று முன்தினம் (13.07.2025) ஈரோடு மாவட்டம், திண்டல் வேலாயுத சுவாமி திருக்கோயிலில் நடைபெற்று வரும் திருப்பணி களையும், 2025 - 2026 ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற அறிவிப்பின்படி ரூ.30 கோடி மதிப்பீட்டில் 186 அடி உயர முருகன் சிலை அமைக்கப்படவுள்ள இடத்தினையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

**பி.கே.சேகர்பாபு பேச்சு!**

பின்னர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :-

முதலமைச்சர் அவர்கள் தலைமையில் திராவிட மாடல் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு திருக்கோயிலின் திருப்பணிகளுக்கு அதிக அளவு முக்கியத்துவம் அளித்து எண்ணிலடங்காத் திருப்பணிகள் பெருந்திட்ட வரைவின் வாயிலாக நடைபெற்று வருகின்றன. இந்தப் பணிகள் எல்லாம் நிறைவுபெறுகின்ற போது மன்னர் ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற திருப்பணி களை விட திராவிட மாடல் ஆட்சியில் நடைபெற்ற திருப்பணிகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

இதுவரை 3,325 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடைபெற்று உள்ளது. அதில் 125 முருகன் திருக்கோயி ல்களாகும். அறுபடை வீடுகளில் முதல் படை வீடான திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் உள்பட 46 திருக்கோயில்களுக்கு நாளை குடமுழுக்கு நடைபெற உள்ளது. இந்தாண்டு இறுதிக்குள் 3,500 திருக்கோயில்களை எட்டும்.

**அரசு மானியம்!**

இந்த அரசு பொறுப்பேற்ற பின், எந்த ஆட்சிக் காலத்திலும் இல்லாத அளவிற்கு இந்து சமய அறநிலையத்துறைக்கு 1,120 கோடி ரூபாயை அரசே மானியமாக வழங்கியுள்ளது. பெருந்திட்ட வரைவின்கீழ் பழனி திருக்கோயி லில் முதல் கட்டமாக ரூ. 98 கோடி மதிப்பீட்டிலும், இரண்டாம் கட்டத்தில் ரூ. 58 கோடி மதிப்பீட்டிலும், திருச்செந்தூரில் உபயதாரர் நிதி, திருக்கோயில் நிதி மற்றும் அரசு நிதி ரூ. 416 கோடி மதிப்பீட்டிலும், திருத்தணியில் ரூ.98 கோடி மதிப்பீட்டிலும், மருதமலை மற்றும் சுவாமிமலையில் மின்தூக்கி அமைக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. திருச்செந்தூர் திருக்கோயில் திருப்பணிகளில் 70 சதவீத பணிகள் நிறைவுப்பெற்றுள்ளன. வரும் அக்டோபர் மாதத்திற்குள் அனைத்து பணிகளும் நிறைவு செய்யப்படும்.

மேலும், திருத்தணி திருக்கோயிலுக்கும் ரூ. 67 கோடி மதிப்பீட்டில் மாற்றுமலைப் பாதை அமைக்கும் பணியும், சிறுவாபுரி திருக்கோயிலுக்கு ரூ. 57 கோடி மதிப்பீட்டில் சாலை விரிவாக்கம் பணிகளும் நடைபெற்று வருகின்றன. வைசம், வைணவம் என அனைத்து திருக்கோ யில்களிலும் திருப்பணிகள் மேற்கொண்டு வருவதோடு தமிழ் கடவுள் முருகனுக்கு பழனியில் மாநாடு நடத்திப் பெருமை சேர்த்த ஆட்சி இந்த ஆட்சியாகும்.

உலகெல்லாம் முருகன் சிலை அமைக்கப்பட்டுள்ள இடங்களுக்கு ஸ்தபதிகளை அனுப்பி பார்வையிட்டு விவரங்களை சேகரித்து மருதமலை, திண்டல் மற்றும் திமிரியில் முருகனுக்கு மிக உயரமான சிலைகளை அமைக்க உள்ளோம். இந்த சிலைகள் காலங்களை கடந்தும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பெயரை சொல்லும் அளவிற்கு மிக சிறப்பாக அமையும். இந்த அரசு பொறுப்பேற்றபின், உபயதாரர்கள் மட்டும் ரூ.1400 கோடி மதிப்பீட்டிலான திருப்பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். கடந்த ஆட்சியில் 10 ஆண்டுகளுக்கு மேலாக அனுமதி வழங்கப்படாமல் இருந்த திருச்செந்தூ ரில் எச்.சி.எல் நிறுவனத்தின் மூலம் ரூ. 200 கோடி திருப்பணிக்கும், பெரியபாளையத்தில் ரூ. 170 கோடி திருப்பணி க்கும் உடனடியாக அனுமதி வழங்கி பணிகளை மேற்கொண்ட அரசு திராவிட மாடல் அரசாகும். ஈரோடு மாவட்டம், திண்டலில் ஆசியாவிலேயே மிக உயரமான முருகன் சிலை அமைக்க உபயதாரர்கள் பலர் நிதி வழங்க முன்வருகின்றனர். அனைத்து தரப்பினரும் எதிர்பார்க்கும் வகையில் திண்டலில் முருகன் சிலை அமைக்கப்படும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**அமைச்சர் முத்துசாமி பேச்சு!**

அமைச்சர் சு.முத்துசாமி பேசியதாவது

ஈரோடு மாவட்டம், திண்டல் வேலாயுத சுவாமி திருக்கோயிலில் மிக உயரமான முருகன் சிலை அமைக்க வேண்டுமென முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைத்தபோது, உடனடியாக அனுமதி வழங்கினார்கள். இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் இந்தாண்டு அதனை சட்டமன்ற அறிவிப்பாக வெளியிட்டு ஆரம்ப கட்ட பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. முருகன் சிலையானது ஆசியாவிலேயே மிக உயரமாக 186 அடி உயரத்தில் சிமெண்டால் அமைக்கப்பட உள்ளது. இதன் பீடமானது 3.5 அடி உயரத்தில் கருங்கல்லால் அமைக்கப்படும். மலையில் உயரம் 50 அடியாகும். ஆக மொத்தம் மலையில் உயரத்தையும் சேர்த்து 240 அடி உயரத்தில் முருகன் சிலை அமையும். இந்த திருக்கோயிலுக்கு தற்போது வரும் பக்தர்கள் கூட்டத்தை போல் 5 மடங்கு கூட்டம் வந்தாலும் அதனை எதிர்கொள்வதற்கு ஏற்ற வகையில் அனைத்து வசதிகளும் அமைக்கப்படும்.

மேலும், இத்திருக்கோயில் சார்பில் இரண்டு திருமண மண்டபங்கள் கட்டும் பணியும், கீழேயுள்ள சிவன் கோயில் திருப்பணியும், இராஜகோபுர திருப்பணியும் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. அனைத்து பணிகளுக்கும் தாராளமாக நிதி வழங்க உபயதாரர்கள் முன் வருகின்றனர். இத்தகைய பணிகளுக்கு உடனுக்குடன் அனுமதி வழங்கிய முதலமைச்சர் அவர்களுக்கு இத்தருணத்தில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் சு.முத்துசாமி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், மாநிலங்களவை உறுப்பினர் திரு. அந்தியூர் ப. செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ. பிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், மாநகராட்சி மேயர் எஸ். நாகரத்தினம், மாவட்ட வருவாய் அலுவலர் எஸ்.சாந்தகுமார், இந்து சமய அறநிலைத்துறை இணை ஆணையர் அ.தி. பரஞ்சோதி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கரூர் மாநகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் முதல்வர் படைப்பகம் என்கிற போட்டித் தேர்வுக்கு தயாராகும் மாணவர்களுக்கான புதிய கட்டட பணியை எம்.எல்.ஏ. வி.செந்தில் பாலாஜி தொடங்கி வைத்தார். அருகில் கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல், டி,ஆர்.ஓ. கண்ணன், மாநகராட்சி மண்டல குழு தலைவர்கள், உறுப்பினர்கள் உள்ளனர்.

கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கிய

# ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை மகத்தான வெற்றி!

## மாவட்டச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. பேட்டி!

கரூர், ஜூலை 15 –

கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கிய ஓரணியில் தமிழ்நாடு, உறுப்பினர் சேர்க்கை மகத்தான வெற்றி பெற்றுள்ளது. இதை பொறுத்துக் கொள்ள முடியாத பழனிச்சாமி பயந்து போய் விமர்சனம் செய்கிறார். இவர் வீடு வீடாக போகாமல் உட்கார்ந்த இடத்திலேயே ஓட்டு கேட்கமுடியுமா?. என கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் வி. செந்தில் பாலாஜி கூறினார்.

கரூர் மாநகராட்சி மண்டலம் 2 மாநகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் முதல்வர் படைப்பகம், கட்டிடம் கட்டும் பணி அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. கரூர் சட்டமன்ற உறுப்பினர், கரூர் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி பணிகளை துவக்கி வைத்தார். கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல் முன்னிலை வகித்தார்.

பின்னர் வி.செந்தில் பாலாஜி செய்தியாளர்களிடம் கூறியதாவது:– கரூர் மாவட்டத்திற்கு அரசு வேளாண்மை கல்லூரி, நெரூர் காவிரி ஆற்றில் உயர் மட்ட பாலம், கோவை, ஈரோடு சாலை அகலப்படுத்துதல், கரூரில் புதிய பேருந்து நிலையம், காமராஜ் மார்க்கெட் புதிய வணிக வளாகம், குளித்தலை அரசு மருத்துவமனைக்கு ரூ.40 கோடியில் புதிய கட்டிடம், தரகம்பட்டி கலை மற்றும் அறிவியல் கல்லூரி புதிய கட்டிடம் கட்டும் பணி, அரவக்குறிச்சியில் அரசு கல்லூரி, முருங்கை உற்பத்திக்கான பூங்கா அமைக்கும் திட்டம். இப்படி தொடர்ச்சியாக பல்வேறு சிறப்பு திட்டங்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கரூர் மாவட்டத்திற்கு வழங்கி உள்ளார்கள்.

அந்த வகையில் இன்று முதல்வர் படைப்பகம் என்கிற கட்டிடப் பணிகள் தொடங்கி வைத்துள்ளோம். ரூ.3 கோடி மதிப்பீட்டில் அமையக்கூடிய இந்த கட்டிடம் என்பது போட்டித் தேர்வுகளுக்கு தயாராக கூடிய மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும். ஆறு மாத காலத்திற்குள் பணிகள் முழுமையாக முடிக்கப்படும். போட்டித் தேர்வுக்கு தேவையான நூல்கள் வைக்கப்பட்டிருக்கும். முழு வசதியுடன் அமர்ந்து கற்று தேர்வுக்கு தயாராகலாம்.

ஓரணியில் தமிழ்நாடு, உறுப்பினர் சேர்க்கை முன்னெடுப்பை கழக தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒன்றாம் தேதி தொடங்கி வைத்து, மூன்றாம் தேதி உறுப்பினர் சேர்க்கை தொடங்கப்பட்டன. 10 நாட்களில் கரூர் மாவட்டத்தில் 30 விழுக்காடு இலக்கு என்பதை கடந்து மகத்தான சாதனையை அனைத்து நிர்வாகிகளும் ஒருங்கிணைந்து செய்துள்ளனர். இதை பொறுத்துக் கொள்ள முடியாத எதிர்க்கட்சியினர் சமூக வலைதளங்களில் செயற்கையாக தகவல் பதிவிட்டு வருகின்றனர். ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டைப் பொறுத்தவரை ஓரணியில் தமிழ்நாடு என்ற உறுப்பினர் சேர்க்கை என்பது மகத்தான வரவேற்பை பெற்றுள்ளது. அரசின் திட்டங்களை எடுத்துக் கூறும் வகையில் துண்டு பிரசுரங்களை பொதுமக்களிடம் வழங்கி நமது நிர்வாகிகள் சொல்வதற்கு முன்பே அவர்கள் இந்த இந்த திட்டங்களில் எல்லாம் நாங்கள் பயன்பெறுகிறோம் என்று கூறுகின்றனர். நாங்கள் சேர்கிறோம் என்று சொன்ன பிறகுதான் உறுப்பினர் ஆக சேர்க்கப்படுகின்றனர்.

எந்த அரசியல் கட்சியும் இது போல் தொழில்நுட்ப ரீதியாக தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி இது வரை செய்ததில்லை. கரூர் மாவட்டத்தில் கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நான்கு தொகுதிகளிலும் நிர்ணயித்த இலக்கை பூர்த்தி செய்தோம் என்பது மகிழ்ச்சியான செய்தி. அதிலும் முதலமைச்சர் அவர்களின் பாராட்டு என்பது இன்னும் ஊக்கம் அளிக்கக்கூடிய செய்தியாகும். இன்னும் அதிக உறுப்பினர்களை கரூர் மாவட்டத்தில் உள்ள நான்கு தொகுதிகளிலும் சேர்ப்பதற்கு முயற்சி எடுப்போம். இலக்கு என்று எதையும் நிர்ணயிக்கவில்லை என்றாலும் கூட, 3 லட்சம் பேர் சேர்க்க இருக்கிறோம். கரூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் நேரில் சென்று அரசின் திட்டங்களை எடுத்து கூறி யார் விருப்பப்படுகிறார்களோ அவர்களை சேர்க்கின்றோம். தலைமை நிர்ணயத்தை இலக்கை நாங்கள் கடந்து விட்டோம்.

எதிர்க்கட்சி விமர்சனம் என்பது, உறுப்பினர் சேர்க்கை என்றால் வீடு வீடாகத் தான் செல்ல வேண்டும். உட்கார்ந்த இடத்திலிருந்து உறுப்பினர் சேர்க்க முடியாது. உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம்கள் கரூர் மாவட்டத்தில் 179 இடங்களில் நடைபெற இருக்கிறது. வீடு வீடாகச் சென்று மக்களை சந்தித்து, கோரிக்கைகளை தன்னார்வலர்கள் மூலம் பெற்று தீர்வு காண நடவடிக்கை மேற்கொள்ளப்பட இருக்கிறது. இதன் நோக்கம் என்ன?. வீடு வீடாகச் சென்று அரசின் திட்டங்களை எடுத்து சொல்வது தான். இதுஎங்கள் கடமை. ஏன் நீங்கள் ஓட்டு கேட்பதற்கு வீடு வீடாக போகவில்லையா?. உட்கார்ந்த இடத்திலா பழனிசாமி ஓட்டு கேட்பார்?. அவர்கள் வீடு வீடாக போக மாட்டார்களா?. அவர் எடுத்த முயற்சி தோல்வியடைந்துவிட்டது. பூத் கமிட்டி என முதலில் போட்டார்கள். தனித்தனியாகவும், பிறகு ஒன்றாகவும், வைத்து ஃபோட்டோ ஒட்டி பார்த்தார்கள். சில நேரங்களில் செய்திகள் கூட வந்தது. அவர்களால் முடியவில்லை. அதனால் எதாவது குறை சொல்ல வேண்டும் என்பதற்காக கூறுகின்றனர். எங்கள் தலைவரின் உத்தரவை நாங்கள் மிகச் சிறப்பாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். நாங்கள் மட்டுமல்ல தமிழ்நாடு முழுக்க எழுச்சியோடு உறுப்பினர் சேர்க்கை பணி நடைபெற்றுக் கொண்டு வருகிறது. மாவட்டம் தோறும், தொகுதிகள் தோறும், ஆரோக்கியமான போட்டியாக முன்னெடுத்து இதை செய்து வருகிறோம். கரூர் மாவட்டத்தை பொறுத்த அளவில் புதிய உறுப்பினர் சேர்க்கை என்பது மூன்று லட்சத்தை கடந்து விட்டோம். 40 விழுக்காடு பழைய உறுப்பினர்கள் 60 விழுக்காடு புதிய உறுப்பினர்கள் என சேர்ப்பு நடைபெறுகிறது.

நாங்கள் உறுப்பினர் சேர்க்கையை குறித்து எதிர்க்கட்சி தலைவருக்கு இவ்வளவு பயம், விமர்சனம் ஏன் என்று தெரியவில்லை. போகின்ற இடங்களில் அவர்கள் ஆட்சியில் சாதனையை சொல்லி கேட்பதற்கு தைரியம் இல்லை. கரூர் மாவட்டத்தில் அவர்கள் ஆட்சியில் நிறைவேற்றிய ஒரு திட்டத்தை கூற முடியுமா?. சில திட்டங்களை கூறுகிறார்கள். அதுவும் நான் கேட்டு வாங்கி வந்த திட்டங்கள் தான் அவை. கடந்த ஆட்சியில் உருப்படியாக எதையும் செய்யவில்லை. அவருடைய விமர்சனம் இப்படித்தான் இருக்கும். செய்த சாதனைகளை சொல்லி மக்களிடம் சென்று சந்தித்து வாக்கு சேகரிப்பது தான் ஒரு அரசியல் கட்சியின் கடமை. அதை விடுத்து ஆளுங்கட்சி மீது விமர்சனம் செய்வது அவர்களுடைய இயலாமையை காட்டுகிறது.

இவ்வாறு வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. கூறினார்.

மயிலாடுதுறை மாவட்டத்திற்கு முதல்வர் வருகை!

# கழகத்தினர் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும்!

## மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ.வேண்டுகோள்!

மயிலாடுதுறை, ஜூலை 15 -

மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது. கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (15.7.2025) மதியம் சிதம்பரத்திலிருந்து மயிலாடுதுறை மாவட்டத்திற்கு வருகை தர உள்ளார்.



மயிலாடுதுறை மாவட்டத்திற்கு வருகை தரும் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மயிலாடுதுறை மாவட்ட எல்லையான கொள்ளிடத்தில் மயிலாடுதுறை மாவட்ட கழகம் சார்பில் மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.

அதைத் தொடர்ந்து. கொள்ளிடம் மேற்கு ஒன்றியம் கொள்ளிடம் புறவழிச் சாலையில் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்து கழக கொடி ஏற்றி வைக்கிறார். அதைத் தொடர்ந்து திருவெண்காடு சென்று அங்கிருந்து மாலை சீர்காழி கிழக்கு ஒன்றியம் செபதனிருப்பில் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் சிலையை திறந்து வைக்கிறார்.

அதைத் தொடர்ந்து கருவி, கீழையூர், வழியாக மயிலாடுதுறை செல்லும் கழகத் தலைவர் அவர்கள் மணக்குடி அருகே பாலாஜி நகரிலிருந்து பொது மக்களை சந்திக்கும் வகையில் சுமார் 4 கிலோ மீட்டர் நடந்து (ரோட் ஷோ ) கால் டாக்ஸி, மணிக்கூண்டு, சின்ன கடை தெரு, வழியாக கச்சேரி சாலையில் வட்டார வளர்ச்சி அலுவலகம் வழியாக அண்ணா பகுத்தறிவு மன்றம் செல்லும் கழக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அங்கு அமைக்கப்பட்டுள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் சிலையை திறந்து வைத்து கழக கொடியை ஏற்றி வைக்கிறார்.

அதைத் தொடர்ந்து 16ஆம் தேதி காலை குத்தாலம் கிழக்கு ஒன்றியம் வழுவூரில் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் சிலையை திறந்து வைத்து கழக கொடியை ஏற்றி வைக்கிறார். பின்னர் மயிலாடுதுறை ஏ.வி.சி. கல்லூரியில் நடைபெற உள்ள அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரை ஆற்றுகிறார்.

இந்நிகழ்ச்சிகளில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள் சட்டமன்ற முன்னாள் , இந்நாள் உறுப்பினர்கள் தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் நிர்வாகிகள் சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள் பிரதிகள், நகர்மன்ற, பேரூராட்சி மன்ற தலைவர்கள், துணைத் தலைவர்கள், உறுப்பினர்கள், கிளைக் கழக வார்டு கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் கழகத்தினர் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தனது அறிக்கையில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. கூறியுள்ளார்.



சேலம் கிழக்கு மாவட்டம் அயோத்தியாப்பட்டணம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் கழக அரசின் நான்காண்டு சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்துரைத்து புதிய உறுப்பினர் சேர்க்கைப் பணியில் தெற்கு ஒன்றியச் செயலாளரும், முன்னாள் ஒன்றிய குழு தலைவருமான ஏ.விஜயகுமார் வீடு வீடாகச் சென்று ஈடுப்பட்டார். அப்போது ஒன்றிய நிர்வாகிகள் உடனிருந்தனர்.




# தி.மு.க. இளைஞர் அணி

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

### ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

திருநெல்வேலி மத்திய மாவட்ட நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 19.07.2025 சனிக்கிழமை | மாலை 6.00 மணி | திருநெல்வேலி மத்திய | ஹோட்டல் அப்னா பார்க், வண்ணாரப்பேட்டை. |

### சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைதளப் பயிற்சி!

பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைதளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம்–9–இல் கன்னியாகுமரி கிழக்கு, கன்னியாகுமரி மேற்கு, திருநெல்வேலி கிழக்கு மற்றும் திருநெல்வேலி மத்திய ஆகிய மாவட்டங்களில் உள்ள சட்டமன்றத் தொகுதிகளில் நடைபெறும் சமூக வலைதளப் பயிற்சி குறித்த விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|
| 19.07.2025 சனிக்கிழமை | காலை 9.00 மணி | ராதாபுரம் | எம்.எஸ்.மஹால், வள்ளியூர். |
| 20.07.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.00 மணி | பாளையங்கோட்டை | ஹோட்டல் அப்னா பார்க், வண்ணாரப்பேட்டை. |
| | மாலை 4.00 மணி | திருநெல்வேலி | ஏ.ஆர்.திருமண மண்டபம், சங்கரன்கோவில் சாலை, கானார்பட்டி, மானூர். |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 09.07.2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி